**OPEN ACCESS**

Manuscript ID: TAM-06012021-4166

Volume: 6

Issue: 1

Month: July

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.05.2021

Accepted: 02.06.2021

Published: 01.07.2021

Citation:
Gowrieeswaran, T. "Aryanization of Local Art Traditions: Research Study Based on 'Thillai Kali Thirunadanam', A Written Text of Kooththu." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 1, 2021, pp. 27–36.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i1.4166

*Corresponding Author:
gowriees@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Aryanization of Local art traditions: Research Study based on "Thillai Kali Thirunadanam", A Written Text of Kooththu

**T. Gowrieeswaran**
*Lecturer, Department of Fine Arts, Faculty of Arts and Culture*
*Eastern University Sri Lanka*

**Abstract -** The traditional art forms of tamils have the feature to sustain in the 21st century too. But the influence of Aryanization in the performing art traditions is considerable and questionable.

The local art traditions are used to socialize and root the ideologies of Aryanization among the local people. In particular, there are a considerable number of written texts composed in this regard.

In recent decades, the emergence of decolonization programs and the reformulation of performing art traditions questions the existing influence of ideologies of aryanization/colonization and recreate the written and performing texts and insist on the importance of reformulation of traditional performing arts.

In this background the research study analyzes the manuscript of 'ThillaiKalai Thirunadanam" composed by Mr. M. Elumalai (2002).

**Key Words:** Folk arts, Puranam, Tamil culture, Local art traditions, Aryanization, Reformulation, Decolonization, Generalization, Patriarchy

**References**

1. https://www.keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/38162-2019-09-25-08-41-02)
2. Ibid
3. http://globaltamilnews.net/2020/139870/
4. http://namathu.blogspot.com/2017/06/blog-post_478.html
5. http://www.tamizhdesiyam.com/2016/10/blog-post_11.html
6. KooththuMeeluruvakkamKodpaadumseyatpadum, Gowrieeswaran.T, 2007
7. 7, 7i, 7ii, 7iii, 7iv, 7v Thillaikaali Thiru Nadanam Kooththupanuval (manuscript of 'ThillaiKaaliThirunadanam" composed by Mr. M. Elumalai (2002).
8. http://karuvanam.blogspot.com/2010/10/blog-post.html
9. Ibid
10. http://www.unmaionline.com/index.php/2014-magazine/89
11. Tho. Paramasivan Nerkanalkal -https://books.google.lk/books?id
12. https://balajithamizh.blogspot.com/2017/01/blog-post_7.html
13. http://www.keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/41024-2020-10-26-10-26-39
14. Ibid
15. https://www.dinakaran.com/News_detail.asp?Nid=150697
16. https://www.hindutamil.in/news/spirituals/510027-thillai-kali.html
17. Naveena Kalaththil Parampariya Kooththin Arasiyal: Thamilaka Ilankai Thamilarkal Maththiyil Payilniliyilulla Kooththukkalpattiyaoppeeddu Aaivu – Kalanithi padda Aaivueadu, Madurai Kamaraj Palkalaikalakam, Jeyasankar. S
18. Ibid

# ஆரியமயமாக்கலும் உள்ளூர் ஆற்றுகைக் கலைகளும்: தில்லைக்காளி திருநடனம் எனும் கூத்துப்பனுவலை மையமாகக் கொண்ட ஆய்வு

*டி. கௌரீஸ்வரன்*
விரிவுரையாளர், நுண்கலைத்துறைப் பண்பாடு
கிழக்குப் பல்கலைகழகம், இலங்கை

***ஆய்வுச்சுருக்கம்***

*தமிழர்களிடையே பயிலப்பட்டு வரும் பாரம்பரிய நிகழ்த்து கலைகள் என அழைக்கப்படும் உள்ளூர் ஆற்றுகைக் கலைவடிவங்கள் இருபத்தியோராம் நூற்றாண்டிலும் நின்று நிலைக்குந்தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன. இந்த உள்ளூர்க் கலை மரபுகளில் ஆரிய மயமாக்கத்தின் செல்வாக்கு குறிப்பிடத்தக்கதாக இருந்து வருகிறது. ஆரிய மயமாக்கம் எனும் பொதுமைப்படுத்தலையும் அதன் கருத்தியல்களையும் மக்கள் மயப்படுத்திவேர் கொள்ளச் செய்வதற்கான கலைவழிச் சாதனமாக உள்ளூர்க் கலை மரபுகள் பயன்படுத்தப்பட்டுவந்துள்ளன. குறிப்பாக ஆரியமயமாக்கம் புனைந்த, திரிபுபடுத்திய, கட்டமைத்த கதையாடல்களைப் பாடுபொருளாகக் கொண்டு கணிசமான தெருக்கூத்துப் பனுவல்கள் ஆக்கப்பட்டுள்ளதனை அவதானிக்க முடிகின்றது. இப்பின்புலத்தில் அண்மைய தசாப்தங்களிலிருந்து எழுச்சி பெற்றுவரும் காலனிய நீக்க ஆய்வறிவுச் செயற்பாடுகள், உள்ளூர் நிகழ்த்து கலை மரபுகளில் செல்வாக்குப் பெற்றுள்ள ஆரிய மயமாக்கத்திற்கான கதையாடல்களைக் கேள்விக்குட்படுத்தி அவற்றைக் கட்டவிழ்த்து மீளுருவாக்குவதன் தேவையினை வலியுறுத்திவருகின்றன. இந்த வகையில் தென்னிந்தியாவின் தமிழகக்கில் பயிலப்பட்டு வரும் தில்லைக்காளி திருநடனம் எனும் தெருக்கூத்துப் பனுவலின் (பல்லகச்சேரி மு. ஏழுமலை என்பவரால் 2002 சித்திரையில் எழுதியதாகக் குறிப்பிடப்பட்டுள்ள கையெழுத்துப் பனுவல்) பாடுபொருள் எவ்வாறு ஆரியமயமாக்கம் எனும் கதையாடலின் செல்வாக்கிற்குட்பட்டதாக இருக்கின்றது என்பதனை இக்கட்டுரை ஆராய்கின்றது.*

***முக்கியச் சொற்கள்:*** *நாட்டுப்புறக்கலை, தமிழ்ப்பண்பாடு, உள்ளூர்க் கலைமரபுகள், ஆரியமயமாக்கம், தேவர் அசுரர், கதையாடல்கள், பொதுமைப்படுத்தல், ஆணாதிக்கம், காலனியநீக்கம், மீளுருவாக்கம், கட்டியகாரன், தெருக்கூத்து*

## அறிமுகம்

தென்னாசியாவின் வரலாற்றில் குறிப்பாக தென்னிந்தியாவில் சங்ககாலம் எனப்படும் கி.மு ஐந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் ஆரியப் பண்பாட்டின் செல்வாக்குகள் எதுவுமற்ற அதற்கு மாறான உள்ளூர்ப் பண்பாட்டு அம்சங்களே நிலவி வந்துள்ளதாகப் பல்வகை வரலாற்று ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். “இந்தியாவில் ஆரியர் வருகைக் காலம் கி.மு. 2000மாக இருந்தாலும் கி.மு 600 வரை கூட தமிழகத்தில் ஆரியப் பரவல் நடக்காமல் தான் இருந்துள்ளது. அதன் பிறகு தான் படிப்படியாக ஆரியர்கள் தமிழ் மண்ணை ஆக்கிரமித்து, அவர்களது சனாதன வருணாசிரமக் கருத்தியலைப் பரப்பி தமிழர்களை அடிமைப்படுத்தி இருக்கின்றனர்.”[1] (செ.கார்க்கி, 2019) பிந்திய தொல்பொருட் சான்றுகளாகக் கிடைக்கப் பெற்றுள்ள கீழடி தடயங்கள் பலவும் மேற்படி ஆரியப் பண்பாட்டோடு சம்பந்தப்படாத தென்னிந்தியப் பண்பாடு செழிப்புற்றிருந்ததை எடுத்துக்காட்டுவதாக துறை சார்

ஆய்வாளர்கள் வலியுறுத்தி வருகின்றார்கள். "கீழடியில் கிடைத்திருக்கக் கூடிய பிராமி எழுத்துக்கள் மூலம் தமிழர்கள் ஆரியர் வருகைக்கு முன்பே கற்று அறிந்தவர்களாக இருந்தனர் என்பதும் உறுதியாகி இருக்கின்றது".[2] (செ.கார்க்கி, 2019) இப்பின்புலத்தில் வட இந்தியாவில் ஆதிக்கஞ்செலுத்திய ஆரியப் "பண்பாட்டு நடவடிக்கைகள் சங்ககாலம் எனப்படும் காலகட்டத்தின் பிற்பகுதியில் மெல்ல மெல்ல தென்னிந்தியாவை நோக்கிப் பரவலாக்கம் பெற்றுள்ளமையினைப் பற்றிப் பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன. தென்னிந்தியாவை நோக்கி நடைபெற்றுள்ள ஆரியப்பண்பாட்டு பரவலாக்கத்தைத் தென்னிந்தியத் தமிழ்ப் பண்பாட்டின் மீதான முதலாவது காலனித்துவமாகக் கருதுகின்றனர். "உலகம் முழுதும் தம் கொள்கை நலன் பேணுகை சார்ந்து, தோற்றம் பெற்ற அரசுகள், தாம் கைப்பற்றிய நாடுகளில், உள்ளூர் பண்பாட்டம் சங்களைப் புறக்கணித்து, தம் கொள்கை நலன் பேணுகைக்காக, நிறுவிய அரசு முறைமைகளும், அவற்றின் கொள்கை பரப்புகையுமே, காலனித்துவம் என்பதாக விளக்கமுடியும். இந்த அடிப்படையில் தமிழ்ச் சூழலில் ஆரியர் வருகைக்கு பின் ஏற்பட்ட ஆரியமயமாக்கம் என்பதும் ஒருவகை காலனித்துவமே".[3] (சுலக்சனா. இரா, 2020) இத்தகைய ஆரியமயமாக்கல் எனும் வட இந்தியக் காலனித்துவம் சங்ககாலம் எனப்படும் காலத்தின் பிற்பகுதியிலிருந்து இற்றைவரைக்கும் தொடர்ந்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது."ஆரியமயமாக்கம் என்பது இங்குள்ள பூர்வகுடிமக்களை விரட்டியது, ஒடுக்கியது, சமஸ்கிருதமயமாக்கம், நிறவெறி, பின்னர் அதுவே வர்ணமாக மாறியது என்று ஒரு பெரும் பார்ப்பனிய அடக்குமுறையோடு தொடர்புடையது".[4] இத்தகைய கருத்தியலின் விளைவாகவே திராவிடக்கொள்கை திரட்சியடைந்தமை பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. திராவிடக் கருத்தியலுடன் வெளிவந்துள்ள பல்வேறு படைப்புக்களும் ஆரியமயமாக்கலின் நுண்ணிய கூறுகளை எடுத்துக்காட்டியுள்ளன.

ஆரியமயமாக்கத்தின் ஓரங்கமாக ஆரியர்களுக்குச் சாதகமான கதைகள் புனையப்பட்டு அவை ஆற்றுகைக் கலைகளூடாகச் சாதாரண மக்களிடையே வேர்கொள்ளச் செய்யும் நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக ஆரியப்பண்பாட்டிற்குரிய மனப்பாங்கை விருத்தியாக்கி அதனைப் பிரயோகத்திற்குக் கொண்டுவருவதற்கு உள்ளூர் ஆற்றுகைக் கலைகள் நன்கு பயன்படுத்தப்பட்டுவந்துள்ளன.

"ஆரியர்கள் தமிழ்நாட்டை அடிமைப்படுத்த வந்தபோது, வில்லேந்தி மட்டும் வரவில்லை -சொல்லேந்தியும் வந்தார்கள். "தீயாடியப்பர்" என்றிருந்த இறைவன் பெயரை, "அக்னீசுவரர்" என்று மாற்றினார்கள். "அறம் வளர்த்தநாயகி" என்ற இறைவிபெயரை, "தர்மசம்வர்த்தினி" என்று மாற்றினார்கள். "மயிலாடுதுறை" என்ற ஊர்ப் பெயரை, "மயுரம்" என்று மாற்றினார்கள். "முருகனை" சுப்பிரமணி என்றார்கள். அதாவது பிராமணர்களுக்கு நன்மை செய்வோன் என்றனர். அவருக்கு வள்ளியுடன் ஏற்கெனவே திருமணமான நிலையில், புதிதாக "தெய்வயானை" என்ற வடநாட்டுப் பெண்ணை கட்டிவைத்தார்கள். ஏன் இவ்வாறு செய்தார்கள்? தமிழர்களின் ஊர்களை-பெயர்களை ஆரியமயமாக்க வேண்டும்! அதற்காக செய்தார்கள்! நம் பண்பாடு - அடையாளம் எல்லாவற்றையும் ஆரியர்கள் மாற்றினார்கள். அது இன்றும் வெவ்வேறு வடிவங்களில் தொடர்ந்து கொண்டிருக்கிறது!"[5]

இத்தகைய நிலைமையில் உள்ளூர் ஆற்றுகைக் கலைகளை ஆரியமயமாக்கம் எனும் காலனியமயமாக்கத்திலிருந்து விடுவித்தலுக்கான காலனிய நீக்க நடவடிக்கைகள் கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள்

ஆராய்ச்சிச் செயற்பாடாக ஈழத்தின் பாரம்பரியக் கூத்தரங்கில் இரண்டாயிரமாம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை கவனத்திற்குரியதாக இருக்கின்றது. “இலங்கைக் கிழக்குப பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையினைச் சேர்ந்த விரிவுரையாளர் சி.ஜெயசங்கர் தன்னுடைய முதுதத்துவமாணி பட்டத்திற்கான ஆய்வுச் செயற்பாடாக மட்டக்களப்பில் உள்ள நீண்டவட மோடி கூத்துப் பாரம்பரியத்தைக் கொண்ட கிராமங்களுள் ஒன்றாகவுள்ள சீலாமுனைக் கிராமத்துக் கூத்துக் கலைஞர்களுடன் இணைந்து மேற்கொண்ட கூத்துமீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வுச்செயற்பாடு புதிய பார்வையில் எமது பாரம்பரிய அரங்குகளின் மீளுருவாக்கம் குறித்த அறிவியலைச் செயலாகவும் கொள்கையாகவும் முன்வைக்கும் செயற்பாடாக அமைந்துள்ளது.”[6] குறித்த கூத்துமீளுருவாக்கச் செயற்பாடும் அது முன்மொழியும் கோட்பாடும் எவ்வாறு நமது பாரம்பரியக் கூத்துப்பனுவல்கள் ஆரியமயமாக்கப்பட்டுள்ளன என்பதை விபரமாக எடுத்துக்காட்டி கூத்தினைப் பயின்று வரும் சமூகத்தின் பங்கு பற்றுகையுடன் சமகால நோக்கில் கூத்துப்பனுவல்களை மீளுருவாக்கும் செயற்பாட்டை முன்மொழிந்து நிற்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் தென்னிந்தியாவின் தமிழகத்தில் ஆற்றுகை செய்யப்பட்டு வரும் உள்ளுர் தெருக்கூத்துக்களுள் ஒன்றாகவுள்ள “தில்லைக்காளி திருநடனம்” எவ்வாறு ஆரியமயமாக்கத்தை வலுப்படுத்தும் சாதனமாக உள்ளது என்பது, குறித்த “தில்லைக்காளி திருநடனம்” கூத்தின் பனுவலை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

## தில்லைக்காளிதிருநடனம் கூத்தின் கதைச் சுருக்கம்

ஆண்பிள்ளைகளால் சாவில்லாமலும் ஒருதுளி உதிரம் புமியில் விழுந்தால் ஆயிரம் இராட்சதர் பிறக்கவும் பிரமதேவரிடம் வரம் பெற்றிருக்கின்ற நிம்பன், சும்பன் எனும் உள்ளூர் அசுரர்கள் இருவரும் திக்விஜயம் செய்து தேவலோகத்தை நோக்கி வருகையில் தேவலோக அதிபதியான இந்திரனுக்கும் இவர்களுக்குமிடையில் சண்டை நடைபெறுகின்றது. இந்திரன் தனது வச்சிராயுதத்தை இவர்கள் மீது ஏவ அதன் காரணமாக உதிரம் வெளியேறி ஒருதுளிக்கு ஆயிரம் பேராகமாற இந்திரன் தாக்குப்பிடிக்க இயலாமல் தேவலோகத்தைவிட்டு கைலாயத்திற்கு ஓடுகிறான்

‘‘ஓம் அரகரமகாதேவா காலகண்டா திருநேத்திரா சூலகபாலாபாவியாகிய நிம்பன் சும்பன் என்று இரண்டு ராட்சதர்கள் வந்து தெய்வலோகத்தை கொள்ளை கொண்டார்கள் இனி அடியேனுக்கு வேறு ஒன்றும் கெதியில்லை இதுவேளை காத்து ரட்சித்தருளும் கர்த்தனே!”[7]

எனச் சிவனிடம் முறையிடுகிறான் சிவன் இந்திரனின் வேண்டுதலுக்கு பதிலளிக்காமையால் சிவனின் இடப்பாகத்திலிருந்த பார்வதியிடம் முறையிடுகிறான் பார்வதி மனம் இரங்கி இந்திரனுக்கு அபயங்கொடுத்து அரக்கரை அழிப்பதாக உறுதி பகர்கிறார். இதனால் பார்வதி தன்னிலிருந்து காளியைத் தோற்றுவிக்கிறாள், பார்வதியும், காளியும் பரமேசுவரனிடம் அனுமதி பெற்று நிம்பனையும் சும்பனையும் வதஞ்செய்யப் புறப்படுகிறார்கள். பார்வதி சூலத்தால் தாக்ககாளிஅவர்களின்உதிரஞ்சிந்தாதவாறு உதிரத்தைக் குடிக்க நிம்பனும் சும்பனும் அழிக்கப்படுகின்றார்கள். பின்னர் பார்வதி இந்திரனை நோக்கி

> **“இந்திரபுபனேகேள் இனியொரு பயமுமில்லை**
> **சந்திரமகுடம் புண்டுதுலங்கிய செங்கோலேந்தி**
> **விந்தைமூவுலகுக்கெல்லாம் வேந்தனாய் அரசுபெற்று**
> **மைந்தனேசுகித்துவாழ்வாய் மகிசியாய் ஏகுவாயே!”[7]**

என்று வாழ்த்திவிட்டு பின்னர்

**"வீரமாங்காளியேகேளாய் விளங்கிய ஆலங்காடு பாரிய**
**வனத்தில் நீயும் படையுடன் சுகித்து வாழ்வாய்"[7]**

என்று கூறி காளியை திருவாலங்காட்டில் இருக்கச் சொல்லி விட்டுகையிலைக்குச் செல்கிறார். இதேவேளை என்னுடைய திருநடனத்தைத் திருவாலங்காட்டில் பார்க்கலாம் அங்கு செல்லுங்கள் என்று பரமசிவனால் வரம் அருளப்பட்டதற்கிணங்க திருவாலங்காட்டில் தவஞ்செய்வதற்காக சுனந்தர், கார்க்கோடகர் எனும் இரு ரிசிகளும் அங்கு வருகிறார்கள் தவஞ்செய்கிறார்கள். உதிரவெறியுடன் அங்கு வந்த காளிசுனந்தரையும், கார்க்கோடகரையும் கண்டுகோபமுற்று அவர்களைத் துன்பமுறுத்தி திருவாலங்காட்டில் ஆட்சி புரிகின்றார்.

இச்சந்தர்ப்பத்தில் தீர்த்தயாத்திரை செல்லும் நாரதர் அங்குவருகிறார், இரு ரிசிகளையும் சந்திக்கிறார் ரிசிகள் காளியால் தமக்கு அசௌகரியமாகவுள்ளதாகக் கூறுகிறார்கள். நாரதர் இதுவிடயமாகக்காளியைச் சந்திக்கச் செல்கிறார் நாரதரைக் கண்டு ஆத்திரமடைந்த காளி அவரையும் தாக்க முனைகிறாள் இதனால் பயந்தநாரதர் பரமசிவனிடம் ஓடுகிறார்

**"வீணைவல்லவரேகேளீர் மெய்த்தவமுனிவர் வாழும்**
**சேனுய்யஆலங்காடுசிவத்தலம் தனையழித்த**
**ஆணவங் கொண்ட காளி அகந்தைதனையடக்க வேண்டும்**
**தானிதோயெண்ணங் கொண்டேன் சஞ்சலமகற்றுவீரே!"[7]**

என்று தனது ஆலோசனையுடன் முறையிடுகிறார். சிவன் அந்தக் காளியின் கர்வத்தை அடக்குவதாக நாரதரிடம் உறுதியளிக்கிறார். காளியை அடக்கப்புறப்படுகிறார் போகும் போது சேனாதிபதியாக அரிஅரபுத் திரனான ஐயனார் என்பவரை அழைத்துச் செல்கிறார். திருவாலங்காடுவந்ததும் ஐயனாரை காளியுடன் சண்டை செய்ய அனுப்புகிறார் காளியின் ஆக்ரோசத்தைக் கண்டஐயனார் பயந்து நடுங்கி சிவனிடம் நீங்களேசமர் செய்யுங்கள் என்று கூற சிவன் நேரடியாகக் காளியைச் சந்திக்கிறார் அவருடன் உரையாடுகிறார்.

காளி சிவனை வெல்லுவேன் என்று கூறுகிறாள் எந்த ஆயுதத்தால் என்னை வெல்லுவாய் என்று சிவன் கேட்க ஆயுதம் மட்டுமல்ல சங்கீத நடனத்தாலும் உம்மை வெல்லுவேன் என்று காளி கூறுகிறாள். இதற்குச் சம்மதித்த சிவன் நடனத்தில் தோற்பவர் வெல்பவருக்கு அடிமை என்ற ஒப்பந்தத்துடன் நடனத்திற்கு ஆயத்தமாகிறார்.

பார்வதிதேவி, தேவர்கள், ரிசிகள் பொதுவராயிருக்க பிரமனும், இந்திரனும் தாளம் போட நாரதர் சுருதி கூட்டிப்பாட, மகாவிஸ்ணு மிருதங்கம் வாசிக்க திட்டமிடப்படுகிறது. இதற்காக மகாவிஸ்ணு திருவாலங்காட்டிற்கு அழைக்கப்படுகிறார் விஸ்ணு வந்ததும் நடனம் ஆரம்பமாயிற்று இருவரும் நடனம் ஆடிக்கொண்டிருந்தார்கள் அப்போது யார் சிறப்பாக ஆடுகிறார் சொல்லுங்கள் எனக்காளி கேட்க இருவரும் சமமாக ஆடுகிறீர்கள் என்று பொதுவரான பார்வதி கூறுகிறார்.

அப்போது சிவன் தாண்டவ நடனத்திற்காக அழைத்தார் காளியும் தயாரானார் போட்டி உச்சமடைந்தபோது சிவன் தனது காலைத் தூக்கித் தாண்டவமாடினார் இதற்குப் பதிலாக காளியும் தனது காலைத்தூக்கி ஆடமுடியாதவாறு தலைகுனிந்து நிற்க மகாவிஸ்ணு காளியின் காலில் விலங்கிட்டு ஆடமுடியாதவாறு தடைவிதித்தார். காளி கோபத்துடன்

**"அண்ணாஅநியாயம் செய்யாதே மணிவண்ணா**
**பெண்ணாய் பிறந்த என்னை பேதகமாய் நினைக்க**
**ஒண்ணாதே ஒண்ணாதே கண்ணா இது**
**தர்மமா?"[7]**

என விஸ்ணுவிடம் கோபத்துடன் நியாயம் கோருகிறாள்.

**"தங்கா எனைத்தடுப்பதழகல்லகேள் நங்கா**
**பெண்கள் சபைக்கு வந்து புருசர்களோடெ திர்த்து**
**பங்கம் செய்ய துணிந்து பரிதவிக்காதேநொந்து"[7]**

என்று விஸ்ணு பெண்கள் ஆண்களை மேவக்கூடாது என்று கூறுகிறார் இத்தோடு கூத்து நிறைவுறுகின்றது. இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள இக்கூத்தின் கதையினூடாகப் பின்வரும் வகையில் ஆரியமயமாக்கம் எனும் கதையாடல் கட்டமைக்கப்பட்டுள்ளமையினை விளங்கிக் கொள்ளமுடிகின்றது.

1. ஆரியமயமாக்கத்தை எதிர்த்த அல்லது அதை விரும்பாத வல்லமை மிகுந்த உள்ளூர்க் குலக்குழுத் தலைவர்கள் அசுரர்கள் எனப் புனையப்பட்டு அநியாயமாகக் கொல்லப்பட்டு அக்கொலைகள் புனிதமாக்கப்பட்டு நியாயப்படுத்தப்படுதல்
2. உள்ளூர்க் குலக்குழுக்களால் வழிபடப்பட்ட அவர்களின் முன்னோர்களான கடவுளர்கள் ஆரியர் பொதுமைப்படுத்திக் கட்டமைத்த பெருங்கதையாடலுக்குள் அடக்கி ஒடுக்கிகரைக்கப்பட்டதன்மை.
3. பெண்களின் பாலியல்புகளைக் காரணமாகக் காட்டி அவர்களை அடக்கியாளும் பார்ப்பனிய ஆணாதிக்கப் பண்பாட்டின் பரவலாக்கம்.

**01. ஆரியமயமாக்கத்தை எதிர்த்த அல்லது அதைவிரும்பாத வல்லமை மிகுந்த உள்ளூர்க் குலக்குழுத் தலைவர்கள் அசுரர்கள் எனப்புனையப்பட்டு அநியாயமாகக் கொல்லப்பட்டு அக்கொலைகள் புனிதமாக்கப்பட்டு நியாயப்படுத்தப்படுதல்:**

ஆரியமயமாக்கம் ஊடாக அசுரர் தேவர் எனும் கதையாடல் கட்டமைக்கப்பட்டுள்ளது. "எவரெல்லாம் பார்ப்பனரில்லையோ, எவரெல்லாம் பார்ப்பனியத்தை எதிர்க்கிறார்களோ அவர்களெல்லாம் அசுரர், பழங்குடியினர்."[8] தேவர்கள் நற்குணம் படைத்தவர்களாகவும் அசுரர்கள் தீயகுணங்கள் கொண்டவர்களாகவும் அசுரர்கள் தங்களிடமுள்ள திறமைகளையும், ஆற்றல்களையும் தேவர்களின் கடவுளர்களிடம் இருந்தே பெற்றுக்கொண்டதாகவும் அத்தகைய வரங்களை அவர்கள் தீயவழியில் பிரயோகிக்க முயன்றதால் தேவர்களின் கடவுளர்களால் அழிக்கப்பட்டதாகவும் இக்கதையாடல்கள் ஆரியப்பண்பாட்டிற்கு வலுச்சேர்ப்பதாக அமைந்து காணப்படுகின்றன.

அசுரர்கள் என்போர் உள்ளூர்க் குலக் குழுக்களின் தலைவர்களாகவும், அவற்றில் வாழ்ந்த பலசாலிகளாகவும் இருந்துள்ளனர். இத்தகைய உள்ளூர் இனக்குழுக்களின் தலைவர்களும், பலசாலிகளும் தமது வாழ்வியலுக்குப் பொருந்தாத, தமது வாழ்வியலை அங்கீகரிக்காத வேற்றுப் பண்பாட்டம்சங்கள் உள்நுழையும் போது அவற்றிற்கு இடங்கொடாதவர்களாகவே வாழ்ந்துள்ளனர். "மூர்க்கத்தனமான காட்டுமிராண்டிமக்களான ஆரியர்கள் இந்தியாவில் படையெடுத்த போது பதிலுக்கு அவர்களைத் தாக்கியவர்களை அசுரர்கள் என்று அழைத்தனர்."[9]

எனவே இத்தகைய உள்ளூர்த் தலைமைகளை உள்ளூர்ப் பலசாலிகளை அழித்தொழிக்க வேண்டியது ஆக்கிரமிப்பாளரின் முதலாவது செயற்பாடாக அமைந்திருக்கும் அதன் பின்னர் அவ்வாறு அழிக்கப்பட்ட தலைவர்களைப் பற்றி அத்தலைவர்களின் தலைமுறைகளிடம் தவறான கருத்துருவாக்கத்தை ஏற்படுத்துதல் இரண்டாவது செயற்பாடாக அமைந்திருக்கும் இந்த இரண்டாவது கட்டத்தின் வெற்றி ஆக்கிரமிப்பின் இலக்கையடைந்ததாக

ஆகிவிடும். இதனைப் பின்வரும் கூற்று வெளிக்காட்டுகின்றது.

"தேவர் அசுரர் போராட்டம் என்பது கடந்த பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நடந்து வரும் ஆரியர் திராவிடர் போராட்டம் என்பது தான்." "புராணங்களில் இதிகாசங்களில் யுத்தம் என்பதே இந்த இரு சாராருக்கும் தான்! இதில் உண்மையான பலம் பொருந்தியவர்கள் (கதைப்படி) அசுரர்களே. தேவர்களைப் புறமுதுகிட்டு ஓட ஓடவிரட்டியவர்கள். அவர்கள் சென்று மும்மூர்த்திகளிடம் முறையிட்டு அவர்களைத் துணைக்கழைத்து வந்து, சூழ்ச்சி, சூது, வாது முறைகளிலேயே இந்த அசுரர்களை (வீரத்தால் அல்ல) வீழ்த்தியவர்களாகத் தான் அவர்கள் சித்தரிக்கப்படுகின்றனர்."[10]

இந்த வகையில் தில்லைக்காளி திருநடனம் கூத்துப் பனுவலில் நிம்பன், சும்பன் எனும் இரு உள்ளூர்த் தலைவர்கள் கொடிய அசுரர்களாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் ஆரியச்சூழ்ச்சியால் கொல்லப்பட்டார்கள் என்பதையும் விளங்கிக் கொள்ளமுடிகின்றது.

**02. உள்ளூர்க் குலக்குழுக்களால் வழிபடப்பட்ட அவர்களின் முன்னோர்களான கடவுளர்கள் ஆரியர் பொது மைப்படுத்திக் கட்டமைத்த பெருங்கதையாடலுக்குள் அடக்கி ஒடுக்கி கரைக்கப்பட்டதன்மை:**

தில்லைக்காளி திருநடனம் எனும் கூத்தில் உள்ளூர்த் தெய்வமான காளிபார்ப்பனியர்களின் நலன்களுக்குரிய வகையில் மாற்றஞ்செய்யப்பட்ட கதையாடல் சித்திரிக்கப்படுவதனைக் காண்கின்றோம்.

உள்ளூர் வழிபாட்டு முறையில் கடவுளுக்கும் மனிதர்களுக்குமான உறவு சாதாரணமானது அதாவது மனிதருக்கும் மனிதருக்குமான உறவினைப் போன்றது இதனைப் பேராசிரியர் தொ. பரமசிவன் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார் "சாப்பாடு, சாராயம், மாமிசம் அனைத்தையும் கடவுளுக்குப் படைக்கிறார்கள். தெய்வங்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள உறவானது நாட்டார் மரபில் எதார்த்தமான உறவாக இருக்கிறது"[11] (தொ. பரமசிவன் 2013) ஆரியமயமாக்கத்தின் பிரதான நோக்கம் மேற்படி வித்தியாசங்கள் கொண்டதாகவும் பன்மைத் தன்மைகள் நிறைந்ததாகவும் இருக்கின்ற உள்ளூர் நம்பிக்கைகளையும் சடங்குப் பண்பாடுகளையும் பார்ப்பனியப் பண்பாட்டு ஒருமைக்குள் கொண்டுவருவதாகும். இதற்காகப் பலகதைகள் பார்ப்பனீயக் கருத்துருவாக்கிகளால் புனையப்பட்டு அவை பல்வேறு முறைகளில் உள்ளூர் மக்களிடையே வேர்கொள்ளச் செய்யப்பட்டுள்ளன. இதனைப் பின்வரும் மேற்கோள் வழியாக மேலும் விளங்கிக் கொள்ளலாம்.

"தொன்மையாக அமைந்திருந்த வேட்டைச் சமூகம் / வேளாண் சமூகம் இவற்றின் வழி உருப்பெற்ற இனக்குழு வழிபாட்டை மறைத்து வடக்கத்திய வேத/புராண/ இதிகாச வழிபாட்டைத் திணித்த வரலாறு. வடக்கத்திய வேதப் புராணக் கடவுளாகிய கார்த்திகேயன் (போர்க்கடவுள்) வழிபாடாகும். சிவ வழிபாட்டின் பிற்காலச் சமய ஒருங்கிணைவு கொண்ட ஸ்கந்த வழிபாடும் ஆரிய மயமாக்கலின் வழித் திணிக்கப் பெற்ற நிகழ்வேயாகும். இது திருமுருகாற்றுப் படையின் வழியாகத் தமிழர் மரபு வழிபாடாகக் காட்டிச் செவ்விலக்கியங்களுக்குள் புகுத்தப் பெற்ற உத்தியாகும். சங்கப் பனுவல்களில் வெறியாடும் வேலனாக இருந்தமுருகன் (காதல் கடவுள்) பின்பு சிவபார்வதியின் மைந்தனாக் ஸ்கந்தனாக் கார்த்திகைப் பெண்களிடம் பாலுண்டவனாக மாற்றப் பெற்றமை ஆரியமயமாக்கலின் வெளிப்படையான பதிவாகும். திருமுருகாற்றுப் படையில் முருகனுடைய ஆறுமுகங்களின் பண்பினை வரிசைப்படுத்தும் பொழுது குறப்பெண்ணாகிய வள்ளியை மணந்த முகம் ஒன்று என

இனக்கலப்பு வழியான வழிபாட்டு ஒருங்கிணைவைக் காணமுடிகின்றது. அதாவது வடக்கத்திய கார்த்திகேய வழிபாட்டை இங்குப் புகுத்தி பூர்விகமான இனக்குழு முருகவழிபாட்டை மழுங்கடித்தல். குறிஞ்சி நிலங்களாகிய மலைக்காடுகளிலெல்லாம் வணங்கப் பெற்றுக் கொண்டிருந்த இனக்குழு முருகவழிபாட்டின் மீது வேதப்புராணக் கதையாடல்களைப் புகுத்திநம்ப வைத்தனர். சிவபார்வதி கதையினை உருவாக்கினர். சிவன் என்ற வடக்கத்திய இனக்குழுத் தலைவ (தந்தை வழிச் சமூகம்) வழிபாட்டினை இங்குப் புகுத்துவதற்கு இந்நிலத்தில் புர்வீகமாக இருந்த தாய்வழிச் சமூகத்தின் எச்சமாகவும் தாய்த்தெய்வமாகவும் வணங்கப் பெற்றுக் கொண்டிருந்த கொற்றவை (மூதாய்) வழிபாட்டினை மறைத்து சக்தி வழிபாடாக (பார்வதி) சிவனின் மனைவியாக்கி அவளுக்குக் குழந்தையாகப் புதியமுருகனைப் படைத்தனர்."[12]

இவ்வாறாக தில்லைக்காளி திருநடனம் எனும் தெருக்கூத்தினூடாக உள்ளூர்த் தெய்வமான காளிபார்ப்பனர்களின் ஆதிக்கத்திற்குள் கொண்டுவரப்பட்ட கதையாடல் சாதாரண மக்களிடையே வலுவாக வேர்கொள்ளச் செய்யப்பட்டு வருவதனை அறியமுடிகின்றது. அதாவது தலைமுறை தலைமுறையாக இக்கதை புதுப்பிக்கப்படுவதற்கு இத்தகைய உள்ளூர் ஆற்றுகைக் கலைகள் பயன்படுத்தப்பட்டுவருவதனை உய்த்துணரமுடிகின்றது.

### 03. பெண்களின் பாலியல்புகளைக் காரணமாகக் காட்டி அவர்களை அடக்கியாளும் பார்ப்பனிய ஆணாதிக்கப் பண்பாட்டின் பரவலாக்கம்.

பெண்களை அடக்கி ஒடுக்குவதில் நிறுவனமயப்படுத்தப்பட்ட மதங்கள் பெரும் பங்கு வகித்துவந்துள்ளமையினை விளங்கிக் கொள்ள முடிகின்றது. உள்ளூர் நம்பிக்கைகளும் வழிபாடுகளும் பெண்களைப் பெரும்பாலும் சுதந்திரமாக வாழவிட்டிருந்த சூழலில் ஆண்களின் ஆதிக்க நோக்கில் உருவாக்கப்பட்ட மதங்கள் பெண்களை ஒடுக்குவதில் பெரும்பங்குவகித்துள்ளன. "பொதுவாக இந்துமதம் என்றில்லாமல் எல்லா மதங்களுமே பெண்களின் உரிமைகளை நிராகரிக்கின்றன. இதற்கு காரணம் அனைத்து மதங்களும் தாய் வழி சமூக அமைப்பு தகர்ந்து தந்ததை வழி சமூக அமைப்பு உருவான காலத்தில் ஏற்பட்டதாகும். மதங்கள் அனைத்தும் ஆணின் பார்வை வழியே சொல்லப்பட்டதால் அந்தச் சமூக அமைப்பில் பெண்களின் இடம் எவ்வாறு இருந்ததோ அதையே தான் அவர்கள் பிரதிபலித்தார்கள்.[13] (செ.கார்கி)

தென்னாசியப் பண்பாடுகளில் பெண்களை கீழ்நிலைப்படுத்துவதில் பார்ப்பனிய மதத்திற்குப் பெரும்பங்கிருப்பதனைக் காணமுடிகின்றது. "பார்ப்பனியம் பெண்களைத் தீட்டாக, அருவருக்கதக்கவர்களாக போதிக்கின்றது", "எப்போது இந்திய சமூகத்தில் பார்ப்பனியம் ஒருமதமாக கோலோச்சியதோ அப்போதில் இருந்து தான் பெண்கள் பற்றிய மதிப்பீடுகள் வீழ்ச்சியடைந்தன. இந்துமதப் புராணங்கள் இந்திரனுடைய பிரம்மஹத்தி தோசத்தில் மூன்றிலொரு பாகத்தைப் பெண்கள் ஏற்றுக் கொண்டதால் அவர்கள் பூப்படைந்ததாக கூறுகின்றது. இதனால் மாதவிடாய் ஆன பெண்கள் பிரம்மஹத்தி வடிவை அணிந்து கொண்டிருப்பவள் என்று சொல்லப்பட்டது. மேலும் பெண்கள் எந்தச் சாதியில் பிறந்திருந்தாலும் அவர்கள் பிரம்மஹத்தி தோசத்திற்குப் பொறுப்பேற்றுக் கொண்டதால் தாழ்ந்தகுலமாகவே கருதப்பட்டனர். இதனால் சொர்க்கம் செல்லும் உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டது. எட்டுவயதுக்குள் பெண்களுக்கு கன்னிகாதானம் செய்து கொடுத்து விட வேண்டும். அப்படி பூப்படையும் காலம்வரை செய்யாதிருப்பது பெரும் குற்றத்திற்குரிய தண்டனையாகக் கருதப்பட்டது."[14] (செ.கார்கி) இத்தோடு பெண்களின் உடலை

ஆண்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாக மாற்றி அதனூடாகப் பெண்கள் ஆண்களை மீற முடியாதவர்கள் என்று கட்டமைத்தது. நவீன உலகில் ஆண்கள் பெண்களை அடக்கி ஆழ்வதற்கும் பெண்ணுடலை ஆண்களின் அதிகாரத்திற்குரியதாகப் பார்க்கும் பார்வை இருந்து வருகின்றது. பெண் உடலை வைத்து வணிகஞ் செய்வதிலும் பெண்ணுடலை வைத்து பண்பாட்டுத் தூய்மை பேசுவதிலும் இந்த ஆணாதிக்க கருத்தியலின் செல்வாக்கைக் காணமுடிகின்றது.

"பெண்ணின் உடலைத் தனதாக்கி அதன் மீதான உரிமையைத் தக்கவைத்துக் கொள்ள ஆண் இனம் பல்வேறு சமூக நடைமுறைகளை உருவாக்கியது. அவற்றைத் தாண்டி தனது வாழ்வை தன்னால் வாழ முடியும் என்ற நிலைக்கு வந்துவிட்டாலும் இன்றளவும் பெண்ணுடல் மீதான ஆணின் ஆதிக்கம் பல்வேறு தாக்குதல்களை நடத்தி வருகிறது."[15]

இந்த ஆணாதிக்கப் பண்பாட்டை மக்கள் மயப்படுத்தும் கதையினைக் கொண்டதாக தில்லைக்காளி திருநடனம் எனும் கூத்துப் பனுவல் காணப்படுகின்றது. சிவனையே விஞ்சுமளவிற்கு ஆடல் ஆடிய காளி "சபையில் அனைவரும் கூடியிருக்கும் வேளையில், ஒரு பெண்ணானவள் இப்படிக் காலைத் தூக்கி ஆடுவது எப்படிச் சாத்தியம்?"[16] எனக் கேள்வி எழுப்பப்பட்டு பெண்கள் ஆண்களை எதிர்க்கக் கூடாது அவர்களுக்கு கட்டுப்பட்டு வாழ்வதே சரியானது எனும் ஆணாதிக்கக் கட்டமைப்பு ஆழமாக வேரூன்றச் செய்யப்படுகின்றது.

**ஆதிக்கங்களைக் கேள்விக்குட்படுத்தும் தெருக்கூத்தின் கட்டியக்காரனும் அதன் முக்கியத்துவமும்:**

தமிழகத்தின் தெருக்கூத்துக்களில் ஆதிக்கங்களின் செல்வாக்கிற்குட்பட்ட கதையாடல்களைப் பாடு பொருளாகக் கொண்டவையாகப் பெரும்பாலான கூத்துப்பனுவல்கள் காணப்பட்டாலும் தெருக்கூத்தின் கட்டியக்காரன் ஒரு சமூக விமரிசகனாக பாடுபொருளின் உள்நோக்கத்தையும் அதன் அரசியலையும் தாறுமாறாக விமர்சிக்கும் ஆற்றலுடன் திகழ்வது தமிழகத் தெருக்கூத்துக்களை சமகாலத் தேவைகளுடன் முன்னகர்த்துவதற்கான சாதகமான தன்மையென ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

"தமிழகக் கூத்து வசனம், பாடல், அடவு என ஆற்றுகை அமைந்திருக்கும். உரையாடலில் பாடல்கள் காணப்படினும் கூத்தின் ஆற்றுகை முழுமையிலும் கூத்தருடனும், பார்வையாளருடனும் ஊடாடி கூத்தை சமகாலத்திற்குரியதாகப் பேச்சுக்களுடன், சமூக அங்கதங்களுடன் வைத்திருப்பவனாகக் கட்டியக்காரன் இயங்குகின்றான்"[17] (ஜெயசங்கர். சி) "பொதுச் சமூக வெளியில் நிகழும் வெளிப்படுத்த முடியாத பிரச்சினைகளை அரங்க வெளியில் வெளிப்படுத்திவிடும் கலைவல்லமையும் மனித ஆளுமையும் மிக்கவர்களின் பாத்திர ஏற்புத்தான் கட்டியகாரன்."[18] (ஜெயசங்கர்.சி)

தமிழகத் தெருக்கூத்தின் கட்டியகாரனுடைய முக்கியத்துவம் காணப்பட்டாலும் அதன் பயனை ஆற்றுகையின்போது தான் பெற்றுக்கொள்ளமுடியும். ஆற்றுகை அல்லாது நாடகப் பனுவல் என்ற மட்டுப்பாட்டுடன் அதனை வாசிக்கும் போது அப்பனுவலின் ஆதிக்க நலன்சார் கருத்தியலே மேலோங்குவதாக இருப்பதனைத் தவிர்க்க முடியாதுள்ளது.

**முடிவுரை**

தில்லைக்காளி திருநடனம் என்ற கூத்துப் பனுவலானது ஆரியமயமாக்கத்தின் செல்வாக்கிற்குட்பட்ட ஆக்கமாக இருப்பதனை விளங்கிக்கொள்ள முடிகின்றது. இக்கூத்துப் பனுவலாக்கம் தொடர்பாகவும் இதிலுள்ள ஆரியமயமாக்கம் தொடர்பாகவும் ஆழமான உரையாடல்கள் நடைபெற வேண்டியது காலத்தின் தேவையாகி நிற்கிறது. இந்த

உரையாடல் கூத்தினை ஆடி வரும் கூத்துக் கம்பனிகளைச் சேர்ந்த கலைஞர்களுடன் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். இத்தகைய உரையாடல்களுடாக ஆரியப் பண்பாட்டுருவாக்கத்தின் செல்வாக்கினைப் பெற்றுள்ள கூத்துப்பனுவல்களை கூத்தர்களின் பங்கு பற்றுகையுடன் ஆதிக்க நீக்கஞ் செய்து மீளுருவாக்கிக்கொள்ள வாய்ப்புக்கள் ஏற்படும். இந்த இடத்தில் ஈழத்துக் கூத்து மீளுருவாக்கத்தின் முன்னனுபவங்களும் முன்மொழிவுகளும் பங்களிப்பு வழங்குவதாகவும் இருக்கமுடியும்.

### ஆதாரங்கள்


1. https://www.keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/38162-2019-09-25-08-41-02)
2. மேலது
3. http://globaltamilnews.net/2020/139870/
4. http://namathu.blogspot.com/2017/06/blog-post_478.html
5. http://www.tamizhdesiyam.com/2016/10/blog-post_11.html
6. கூத்துமீளுருவாக்கம் கோட்பாடும் செயற்பாடும், கௌரீஸ்வரன். து, 2007
7. 7i,7ii,7iii,7iv,7v தில்லைக்காளி திருநடனம் கூத்துப்பனுவல் கையெழுத்தில் உள்ளது (பல்லகச்சேரி மு. ஏழுமலை என்பவரால் 2002 சித்திரையில் எழுதியதாகக் குறிப்பிடப்பட்டுள்ள கையெழுத்துப் பனுவல்)
8. http://karuvanam.blogspot.com/2010/10/blog-post.html
9. மேலது
10. http://www.unmaionline.com/index.php/2014-magazine/89
11. தொ. பரமசிவன் நேர்காணல்கள் (Tho. Paramasivan Nerkanalkal) https://books.google.lk/books?id
12. https://balajithamizh.blogspot.com/2017/01/blog-post_7.html
13. http://www.keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/41024-2020-10-26-10-26-39
14. மேலது
15. https://www.dinakaran.com/News_detail.asp?Nid=150697
16. https://www.hindutamil.in/news/spirituals/510027-thillai-kali.html
17. "நவீன காலத்தில் பாரம்பரிய கூத்தின் அரசியல்: தமிழக - இலங்கைத் தமிழர்கள் மத்தியில் பயில்நிலையில் உள்ள கூத்துக்கள் பற்றிய ஒப்பீட்டாய்வு", கலாநிதிப்பட்ட ஆய்வேடு, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், ஜெயசங்கர். சி
18. மேலது